குறிப்பிட்ட புகார் எதுவும் வந்தால் உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருக்கிறோம். அப்படி குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மற்றும் திருப்பூரிலுள்ள மருத்துவமனைகளில் பிணங்களை எடுத்துச் செல்ல வாகன வசதி ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 318—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் திருப்பூர் மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும் நோயாளிகள் இறந்துவிட்டால், அவர்களின் உடல்களை எடுத்துச் செல்ல வாகன வசதி ஏற்படுத்த ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) கோவை மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலும், திருப்பூர் மாவட்ட தலைமை மருத்துவமனையிலும் பிணங்கள் எடுத்துச் செல்ல பிண ஊர்திகள் உள்ளன.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, சாதாரண மக்கள் அந்த மருத்துவ மனைகளில் இறந்துவிட்டால் அவர்களுடைய சடலங்களை எடுத்துச் செல்ல இந்த ஊர்திகளைக் கேட்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் ஏழை எளிய மக்களுக்கு இந்த ஊர்திகள் கிடைக்காததால், அந்த சடலங்களை எடுத்துச் செல்ல 500 ரூபாய், 1,000 ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த மாவட்ட மருத்துவ மனைகளிலும், வட்ட மருத்துவ மனைகளிலும் குறைந்தபட்சம் இந்த வண்டிகளை கராராக வைத்திருந்து, தேவையானவர்களுக்கு கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இந்த கேள்வியை எழுப்பியவுடனே இன்னொரு தகவலையும் நான் சேகரித்தேன். எத்தனை பிணங்கள் அங்கே கிடங்குகளில்

வைக்கப்பட்டன ; எத்தனை பிணங்கள் இந்த ஊர்திகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன என்ற தகவலையும் கேட்டு வாங்கி யிருக்கிறேன். 1982 ஆம் ஆண்டு இறந்தவர்கள் சடலங்கள் இந்த போஸ்ட்மார்ட்டம் மார்ச்சுவரியில் வைக்கப்பட்டவை 240 ; இந்த ஊர்திகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டவை 179. 240 சடலங்களில் 179 இந்த ஊர்திகள் மூலம் அகற்றப்பட்டி ருக்கின்றன. ஆகவே, இந்த வண்டிகள் சரியாகப் பயன்படுத்தப் படும் நிலைமை இருக்கிறது என்று கண்டறிந்திருக்கிறோம். ஒன்றிரண்டு இடங்களில் சரிய க பயன்படவில்லை என்று தகவல் கிடைத்த உடனே நடவடிக்கை எடுக்கிறோம். அதுமட்டுமல்லா மல், ஜட்கா வண்டிக்காரர்களோடு பேரம் பேசி, இந்த ஊர்தி கள் பழுதடைந்து விட்டன. இயங்காது என்று சொல்வதாக புகார் வருகிறது. அதுபற்றியும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே இறந்த சடலத்தைக் கொண்டு போக இந்த ஏற்பாடுகள் ஓரளவுக்கு சரியாகச் செய் திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் நோயினால் பாதிக்கப் பட்ட சிலர் வட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று, மேலும் அங்கே போதிய மருந்து இல்லாததாலோ அல்லது வேறுவிதமான சிகிச்சை அளிக்க போதிய வசதி இல்லாததாலோ பெரிய மருத்துவ மனைக்கு அந்த நோயாளிகள் அனுப்பப்படும் சூழ் நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் அங்கே ஆம்புலன்ஸ் வண்டிகள் இருந்தும்கூட அந்த நோயாளிகளை எடுத்துச் செல்ல மறுத்துவிடுகிறார்கள். அதைப்போல சடலங் களை எடுத்துச் செல்லவும் மறுக்கிறார்கள். உடுமலைப் பேட்டையில் உரிய நேரத்தில் ஒரு நோயாளியை எடுத்துச் செல்லாத காரணத்தால் அங்கே இறந்துவிட்ட நிலைமை எல்லாம் ஏற்பட்டது. இதிலே பாரபட்சம் காட்டாமல் தேவை யானவர்களுக்கு இந்த ஊர்திகள் கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு உத்திரவாதம் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே நிச்சயமாக உத்திரவாதம் செய்யப்படும்.

குமரி மாவட்டத்தில் முன்னாள் அரசு போக்குவரத்துத் துறையில் பணியாற்றிய ஊழியர்கள்.

*வினா எண் 319—திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் முன்னாள் அரசு போக்கு வரத்துத் துறையில் பணியாற்றி பின் கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகத்தில் பணியில் சேர்ந்தவர்களுக்கு அரசு போக்கு